Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண்

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது மாசி 10 ஆம் நாள் ஷவ்வால் 7 (22-2-64) சனிக்கிழமை இதழ் 12

உங்களுடைய அன்றாட பாவனைக்கு
திறம்
கே. ஆர். லிங்கன்ஸ்
காப்பித்தூள், மிளகாய்த்தூள்
புதிய முறையில் தயாரிக்கப்பெற்றது
யாழ்ப்பாணம் பஜார் ஏஜண்ட்
எம். பரராசசிங்கம்
சேலம் பீடி ஏஜண்ட்ஸ்,
யாழ்ப்பாணம்.

தேர்தலுக்கு கட்சிகள் ஆயத்தம்!

அபேட்சகர் தெரிவில் இடதுசாரி முன்னணி

கொழும்பு, வெள்ளி

இவ்வருட இறுதிக்குள் பொதுத்தேர்தல் நடைபெறுமென்றும் அதற்குத் தயாராகுமாறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி.க்களுக்கும், மந்திரிகளுக்கும் சில தினங்களுக்கு முன் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கூறியதாக வெளிவந்த செய்தியைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகள் பலவும் தேர்தலுக்கான ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்யத் தொடங்கியுள்ளன.

யு. என். பி. முன்னரே பொதுத் தேர்தலை எதிர் நோக்கிக் கொண்டிருந்ததால் அது தேர்தலுக்குத் தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது.

தேர்தலுக்கு அபேட்சகர்களை நிறுத்துவது சம்பந்தமாக இடதுசாரி ஐக்கியமுன்னணியைச் சேர்ந்த திரு. லெஸ்லி குணவர்த்தன, திரு. பீட்டர் கெனமன், திரு. எம். டி. பெரேரா ஆகியோர் ஆலோசனை செய்து வருவதாக அறியப்படுகிறது. இதேசமயம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எம். பிக்கள் சிலர் இடதுசாரி முன்னணியின் சார்பில் அடுத்த தேர்தலில் போட்டியிட முயற்சி செய்வதாகவும் அறியப்படுகிறது.

யாழ்ப்பாணத்துக்கு சேலை வேட்டி அனுப்பப்படவில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

பொதுமக்களின் நன்மையைக் கருதி காங்கேசன்துறை வீதியிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன சில்லறை கடை ஊழியர்கள், மத்தியான போசன இடவேளைக்காகவும் கடையைப் பூட்டாமல் தினமும் இரவு 7-30 மணி வரை தொடர்ந்து கடமையாற்றிவருகிறார்கள். ஒரு நாள் மட்டும் பொலிஸார் கடமையாற்றியபோதிலும், மற்ற நாட்களில் அங்கு கடமையாற்றும் ஊழியர்களே மக்கள் கியூவில் சென்று துணிகளைப்பெற சிறந்த முறையில் ஒழுங்கு செய்துள்ளார்கள்.

ஒரு கூப்பனுக்கு 4 யார் துணி அல்லது சேலை, சாரம், வேட்டி வழங்க மேலிடம் உத்தரவிட்டிருந்தபோதிலும், வட மாகாணத்திற்கு சேலை, சாரம் வேட்டி ஆகியவை அனுப்பப்படாததால் மக்கள் கூப்பன் ஒன்றுக்கு 4 யார் துணிகளை மட்டுமே வாங்கிச்செல்கிறார்கள். தற்பொழுது வந்திருக்கும் துணிகள் முடிவடைந்ததும் மீண்டும் துணிகள் வராதென்ற அச்சம் காரணமாக, மக்கள் நீண்ட நேரம் கியூவில் நின்று துணிகளை வாங்கி செல்கிறார்கள்.

காங்கேசன்துறை வீதியிலுள்ள சில்லறை கடைக்கு அனுப்பப்பட்ட துணிகளில் நேற்றுடன் 'சீத்தை' துணிகள் முடிவடைந்துவிட்டதால் இன்று பெண்கள் வரிசை குறைவாகவே காணப்பட்டது. பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இன்று கடமையாற்றிருந்தும் ஆண்களும், பெண்களும் 'கியூவில்' பொறுமையோடு நின்று துணிகளை பெற்றுச் சென்றார்கள்.

எவ்வளவு யார் துணிகள் தங்கள் கடைக்கு அனுப்பப்பட்டதென்று கூறமுடியாதென்றும், ஆனால் தங்களுக்கு அனுப்பப்பட்ட துணிகள் அநேகமாக முடிவடைந்துவிட்டதாகவும், அடுத்த தடவை எப்பொழுது துணிகள் அனுப்பப்படுமென்று தங்களுக்கு அறிவிக்கப்படவில்லையென்றும் நமது நிருபரிடம் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

தேசிய லொத்தர் சபையின் முதலாவது சீட்டிழுப்பு நேற்று மாலை சுதந்திர மண்டபத்தில் நடைபெற்றது. பரிசு பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

முதற் பரிசு
16 J 0034 — ரூ. 65,000
இரண்டாம் பரிசு
01 N 0046 — ரூ. 25,000
மூன்றாவது பரிசு
04 R 0889 — ரூ. 10,000

(6-ம் பக்கம் பார்க்க)

ஐ. நா. வுக்கு பல்ஸான் பரிசு

நியூயோர்க், பெப். 21

இவ்வாண்டு சமாதானத்திற்கான சர்வதேச பல்ஸான் பரிசு ஐ. நா. ஸ்தாபனத்துக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதன் மதிப்பு 2,20,000 டாலர்களாகும். ஐ நா. வின் சார்பாக யுதாண்ட் இப்பரிசைப் பெற்றுக்கொண்டார். சென்ற ஆண்டு இப்பரிசு காலஞ்சென்ற போப்பாண்டவர் அருளப்பருக்கு வழங்கப்பட்டது.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்..
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

துருக்கி பிரதமரைக் கொல்ல முயற்சி

சந்தேக நபர் கைது

அங்காரா, பெப். 21

துருக்கிப் பிரதமர் திரு. இஸ்மத் இனுனுவைக் கொலை செய்ய இன்று மேற்கொள்ளப்பட்ட முயற்சியொன்று தோல்வியடைந்துள்ளது.

எண்பது வயதுள்ள துருக்கிப் பிரதமர், தேசிய சட்டசபைக்கு செல்லும் பொருட்டு அங்கராவிலுள்ள தமது காரியாலயத்திலிருந்து வெளியே வந்தபொழுது, ஒரு நபர், பிரதமர் மீது நான்கு தடவைகள் சுட்டார். ஆனால் குண்டுகள் எதுவும் பிரதமர் மீது படவில்லை. பிரதமர் திரு இனுனுவின் மெய்க்காப்பாளர்கள் உடனடியாக அந்தக் கொலைகாரன் மீது பாய்ந்து அவனைப் பிடித்துக்கொண்டனர். அவனிடம் கைத்துப்பாக்கியொன்று இருந்தது. பிரதமரைக் கொலை செய்ய முயற்சித்த நபர் கைது செய்யப்பட்டு தற்பொழுது காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேற்கண்ட விபரங்களை அங்காரா வானொலி இன்று அறிவித்தது.

இலங்கையின் கொள்கையால் 145 இந்திய வர்த்தகர் பாதிப்பு

லோகசபையில் மந்திரி தகவல்

புதுடில்லி, பெப். 21

ஜவுளி இறக்குமதி வர்த்தகத்தில் இலங்கையர் மட்டுமே ஈடுபடலாம் என இலங்கை அரசாங்கம் முடிவுசெய்திருப்பதால், 145 இந்தியவர்த்தகர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக இன்று லோகசபையில் இந்தியத் தொழில் மந்திரி திரு. நித்தியானந்த களங்கோ அறிவித்தார். இதனால் அவர்களுக்குச் சிரமங்கள் நேரும் என இலங்கை அரசாங்கத்துக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாயும் அவர் கூறினார்.

காங்கிரஸ் 32; தி. மு. க. 6

தமிழ்நாட்டில் 64 நகரசபை தேர்தல் முடிவுகள்

சென்னை, பெப். 21

தமிழ்நாட்டில் இதுவரை நடைபெற்ற 64 நகரசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் 32 நகரசபைகளைக் கைப்பற்றியிருக்கிறது. காஞ்சிபுரம், வேலூர் உட்பட 6 நகரசபைகளை தி. மு. க. கைப்பற்றியது.

மொத்தம் 1608 தொகுதிகளில் நடைபெற்ற தேர்தல்களில் கட்சிகள் வெற்றி பெற்ற ஸ்தானங்கள் பின்வருமாறு:-

காங்கிரஸ்	— 745
தி. மு. க.	— 251
கம்யூனிஸ்ட்	— 58
சுதந்திரா	— 32
முஸ்லிம்லீக்	— 35
இதர கட்சிகள்	— 36
சுயேச்சை	— 451

மலேசியா வீரர் கொலை

போர்ணியோ யுத்த நிறுத்தம் மீறப்பட்டது ?

கோலாலம்பூர், பெப். 21

மலேசியா பாதுகாப்பு படைவீரர்களை இந்தோனேஷிய கொரில்லாக்கள் நேற்று மீண்டும் ஒரு முறை தாக்கினர் என்றும் இத்தாக்குதல் காரணமாக மலேசியா 'காப்ரல்' ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்றும் நால்வர் காயமுற்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மலேசியா துணைப் பிரதமர் திரு. அப்துல் ரஸாக் தெரிவிக்கையில், போணியோவில் யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறி இச்செயலில் அவர்கள் இறங்கிவிட்டனர் என்றும், யுத்தநிறுத்தம் சரியான வகையில் மேற்கொள்ளாத வரை பிலிப்பைன்ஸ் அதிபர் தெரிவித்த திட்டத்தை பரிசீலனை செய்ய முடியாதென்றும் கூறினர்.

தாக்குதல் நடத்திய இந்தோனேஷிய கொரில்லாக்கள் இராணுவ உடை தரித்திருந்தனர் என்றும் அவர்களிடம் இயந்திரத் துப்பாக்கிகள் இருந்தனவென்றும் மலேசியா வானொலி அறிவித்துள்ளது.

மணிவாக்கு

மனிதனிடமுள்ள ஆத்மீகசக்தி அளவு கடந்தது. கருங்கல் மனமும் படைத்தவர் பலரும் மனம்இளகி புது மனிதராகியுள்ளனர். எந்த மனிதருக்கும் உய்வு இல்லை என்று முன்கூட்டியே யாரும் சொல்லிவிடமுடியாது.

— வில்லியம் ஜேம்ஸ்

ஈழநாடு
EELA NADU
ELANADU: National Tam
Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு
மாசி 10 ௴ உ (22-2-64)

துணி விநியோக சங்கடம்

யாழ்ப்பாண கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் கடையிலே துணி விற்பனை சம்பந்தமாக பலபுகார்கள் கிளம்புகின்றன. அக்கடையிலே நான்கு கஜத் துணி வாங்குவதற்காக காலை முதல் மாலைவரை நீண்ட கியூ வரிசையில் மக்கள் நிற்க வேண்டியிருக்கிறதாம். ஒரு பெண்மணி களைத்து மயக்கமுற்று மூன்றாவது படியிலிருந்து விழுந்துவிட்டதாகவும் கால்சட்டைக்காரருக்கும், மோட்டாரில் வரும் சிலபெண்களுக்கும் சலுகை காட்டப்படுவதாயும் சொல்லப்படுகின்றது.

துணிப்பஞ்சம் ஏற்பட்டிருக்கையில் இவ்வித சங்கடங்கள் ஏற்படுவது இயற்கை என்று சமாதானம் கூறப்படலாம். ஆனால் இங்கு ஒரேஒரு கடை மூலம் துணிவிற்பதற்கு பதில் பலகடைகள் மூலமும் விநியோகிக்க ஏற்பாடு செய்திருந்தால் இந்தச் சங்கடம் குறைவாக இருக்கும். இன்றைய அவலநிலைக்கு கூ. மொ. விற்பனை ஸ்தாபனத்தாரைக் குறை கூறுவதில் பயனில்லை. சற்றே தீர்க்கதரிசனத்துடன் இதுசம்பந்தப்பட்ட அமைச்சு காரியம் செய்திருப்பின் இவ்வித அவலநிலை ஏற்படாதவாறு தடுத்திருக்கலாம்.

யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவுக்கடையைச் சேர்ந்த ஒரு அதிகாரி இவ்வித பொறுப்பைத் தாங்களும் ஏற்க பன்முறை முன்வந்தும் அதற்கு அமைச்சு செவிசாய்க்காமலிருந்துவிட்டதாம். இது துரதிருஷ்டவசமாகும். அரிசிக் கூப்பன்மீதே 4 யார் துணி அளிப்பதென்று எப்போது ஏற்பாடு செய்யப்பட்டதோ, அப்போதே பொறுப்புள்ள பல வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் விற்பனை உரிமையை அளித்திருக்க வேண்டும். அப்பொழுது பல கடைகளிலும் மக்கள் பிரிந்து கூடுமானவரை வசதியாகத் துணிவாங்கி இருக்க முடியும்.

வர்த்தக, கைத்தொழில் அமைச்சின் பொறுப்பிலே துணிப் பங்கீட்டு இலாகா ஏற்படுத்தி கூ.மொ.வி.கடைமூலம் மட்டுமன்றி பல தனிப்பட்ட கடைகள் மூலமும் துணி விநியோகம் செய்வதென்றுசென்ற புதன்கிழமை அரசாங்கம் தீர்மானித்துள்ளதாம். தனிப்பட்ட வர்த்தக ஸ்தாபனங்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெறத் தீர்மானித்தது வரவேற்கத்தக்கது. அடுத்த 6 மாதத்திலே, துணிப்பங்கீடு கூப்பன்களையும் யுத்தகாலத்தில் செய்ததுபோல் விநியோகிக்க உத்தேசித்திருக்கின்றார்களாம். யுத்தகாலத்தில் உலகில் துணிப்பஞ்சமிருந்தது. இப்போது இல்லை. இங்குதுணிக்கு ஏற்பட்டுள்ள பஞ்சத்துக்கு அரசாங்கந்தான் முக்கிய பொறுப்பு. மற்ற அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பை, இந்த முக்கிய தேசியப்பிரச்னையிலும் அரசாங்கம் பெறுவதாயின், இன்று ஏற்பட்டுள்ள துணிப்பஞ்சத்தை வெகுசலபமாக நீக்கி, துணிப்பங்கீட்டுக்கு அவசியமில்லாதவாறு தடுத்திருக்கலாம். அப்படிச் செய்ய துணிச்சலுடன் அரசாங்கம் முன்வந்தால் அது பொதுமக்களுக்குப் பெரிய கஷ்டநிவாரணமாவதுடன் அரசாங்கத்தின் வீண்தலையிடியும் வெகுவாக நீங்கமுடியும்.

புதிய சுப்ரீம்கோர்ட் நீதிபதி

கொழும்பு, வெள்ளி

திரு. ஏ. எல். எஸ். சிறிமானே இன்று முதல் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. பி. ஜி டி. ஹென்றி கோலாலம்பூரில் வர்த்தகக் கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நிந்தாவூர் கி. ச. தேர்தல்

அக்கரைப்பற்று, வெள்ளி

நிந்தாவூர் கிராமசபையின் தேர்தலுக்கான நியமனப்பத்திரம் கிழக்குப் பிரதேச தேர்தல் அதிகாரியால் நிந்தாவூர் கிராமசபை மண்டபத்தில் மார்ச் மாதம் 4-ந் திகதி ஏற்றுக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எட்டு வட்டாரங்களிலும் இம்முறை போட்டியிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கு ஜெர்மனி அங்கீகாரம்

கிழக்கு ஜெர்மனிக்கு இலங்கை அரசாங்கம் அரசியல் அங்கீகாரமளித்தமை, மேற்கு ஜெர்மனிக்குப் பிடிக்கவில்லை. சில மேற்கு வல்லரசுகளும் இதற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளன. இது எதிர்பார்க்கப்பட்டதே. ஆனாலும் தாங்கள் இலங்கைக்குப் பொருளாதார உதவி அளிப்பதாகவும் ஆகவே, இலங்கை கிழக்கு ஜெர்மனிக்கு இவ்வித அரசியல் அந்தஸ்து அளிக்கப்படாதென்றும் ஒரு மேற்கு ஜெர்மன் பத்திரிகை வாதிக்கின்றது. நாம் பிறரிடமிருந்து பெறும் உதவிக்கு எவ்வித நிபந்தனையும் இருக்கப்படாது: நிபந்தனை இருப்பின் அது நம் அரசியல் சுதந்திரத்துக்கும், மானத்துக்கும் இழுக்காகும்.

மேற்கு ஜெர்மனி நமக்கு அளித்துவரும் பல உதவிகளுக்கும் நாம் நன்றி செலுத்துகிறோம். ஆனால் இதற்காக நமது அரசியல் உரிமையை விட்டுக்கொடுக்க முடியாது. தவறுசெய்யவும் உரிமை இருப்பதே உண்மைச் சுதந்திரத்துக்கு அடையாளமென்று காந்தி அடிகள் கூறுவதுண்டு. ஆகவே மேற்கு ஜெர்மனி அளித்துவரும் உதவியை அவசரப்பட்டு நிறுத்திவிடாதென்றே நம்புகிறோம். கிழக்கு ஜெர்மன் அரசாங்கத்துக்கு அரசியல் அங்கீகாரமளித்துள்ளதால், இலங்கை அதன் கொள்கைகளை ஒப்புக்கொண்டுவிட்டதாகாது.

"மூன்று வருடத்துக்காவது தேசிய அரசாங்கம் தேவை"

வில்மட் பெரேரா கருத்து

பாணந்துறை, வெள்ளி

மூன்று வருடகாலம்மட்டும் பதவியிலிருக்கும் தேசிய அரசாங்கம் மிகவும் பயனுள்ளதாக இருக்குமென திரு. வில்மட் பெரேரா இளைஞர் முன்னணிக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார். தேர்தல் நடைபெற்ற பின்னர் சகல கட்சிகளிலும் இருந்து பிரதிநிதிகளை எடுத்து ஒரு தேசிய அரசாங்கம் அமைத்து மூன்று வருடம் பதவியிலிருந்தால் இப்போதுள்ள அரசாங்க முறையால் அடையக் கூடிய நன்மைகளைவிட அதிகமான நன்மையடையலாம் எனவும் திரு. வில்மட் பெரேரா விளக்கம் தெரிவித்தார். 'இப்பொழுதுள்ள கஷ்டங்களை எவ்விதம் களையலாம்' என்று கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. வில்மட் பெரேரா மேலும் குறிப்பிட்டதாவது:-

"திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா கட்டுக் கொலை செய்யப்பட்ட சிலவார காலத்துக்குப் பின்னரும் நான் இவ்விதம் தெரிவித்திருந்தேன். திரு. பிலிப் குணவர்த்தனா இதுபற்றிக் குறிப்பிட்டிருந்தார். திரு. தகநாயக்காவும் இது போன்ற கருத்தொன்றை வெளியிட்டதாகவும் எனக்கு ஞாபகம்.

சீனா எங்களுக்கு துணிவகை ஏற்றுமதி செய்யவிருப்பதாகவும், சிறு தொகையான சீமெந்தை நன்கொடையாக வழங்க விருப்பதாகவும் பத்திரிகைகள் அண்மையில் தெரிவித்திருந்தன. முன்னர் நாங்கள் கொடுக்கும் ரப்பருக்காக அவர்கள் அரிசி தந்தார்கள். முன்னர் செய்துகொண்ட ஒப்பந்தம் ஒன்றின்படி வருடமொன்றுக்கு 150 லட்சம் ரூபா உதவி தந்தார்கள். அந்த ஒப்பந்தம் செய்துகொள்ளும்போது நானும் பிரசன்னமாயிருந்தேன். ஆனால் ரப்பர் சாகுபடிக்கெனப் பெறப்பட்ட அந்த உதவியை நமது நாடு தக்க முறையில் உபயோகிக்கவில்லை என்பதைக் கண்டு மனவருத்தமடையவேண்டியுள்ளது.

சீனாவை பூரணமான சோஷலிச நாடாக்கும் வகையில் அங்கு சோஷலிசம் வளர்ந்துகொண்டிருக்கிறது ஆனால் இலங்கையில் உள்ள நாங்கள் சமூக சேவையை சோஷலிசம் எனத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறோம்! 2000 ஏக்கர் தோட்டத்தை எடுத்து அதை ஏழை மக்களுக்குப் பகிர்ந்துவிடும் அதே நேரத்தில் அந்தத் தோட்டங்களில் உழைத்த 1500 இந்தியர்களையும் இந்தியாவுக்கு அனுப்பிவிடுகிறோம் சோசலிசம் இதுவல்ல! ஐரோப்பிய முதலாளிமார்களிடம் தோட்டங்கள் இருக்கும்போது கிடைத்த லாபத்தில் மிக சொற்பமானதே எங்கள நாட்டு முதலாளிகளிடம் இருக்கும்போது கிடைக்கிறது.

நாங்கள் அதிகம் உழைக்க வேண்டியவர்களாகவே இருக்கிறோம். பஸ், துறைமுகம் ஆகிய இன்னும் பலவற்றை தேசியமயமாக்கியுள்ளோம். நாட்டிற்கு வருமானம் தர வேண்டிய அந்த தேசியமய ஸ்தாபனங்கள் எமது பொருளாதாரத்தின் பழுவையல்லா அதிகரிக்கின்றது!'

சீனாவில் பொதுமக்களுடைய சம்பந்தப்பட்ட சிலவித வர்த்தகங்கள் தனிப்பட்டமுறையில் இயங்குகின்றன. அவற்றைத் தேசிய உடமையாக்க விரும்பும் போது அதை முதலிலேயே தேசியமயமாக்குவதில்லை. தனிப்பட்ட-தேசிய ஸ்தாபனங்களாக பல வருடம் நடத்திய பின்னரே படிப்படியாகத் தேசியமயமாக்கப்படுகின்றன. 400 வருடங்களாக ஒரு குடும்பத்தினர் நடத்திவந்த மருந்துத் தொழிற்சாலை ஒன்றை அரசாங்கம் எடுத்தது. நான் சீனாவில் இருக்கும்போது அதன் உரிமையாளரைக் காண நேர்ந்தபோது தேசியமயமாக்கப்பட்டபின் எப்படி உள்ளது எனக் கேட்டேன். தனக்கு அரசாங்கம் சம்பளம் கொடுப்பதாகவும், தானே அதை நிர்வகித்துவருவதாகவும், மேலும் மூலதனம் விடுவதற்கு கஷ்டப்படவில்லையென்றும, அரசாங்கம் உதவி நிதியளித்துவருவதாகவும், ஊழியர்களுக்கு நல்ல ஊதியம் கிடைப்பதோடு அரசாங்கத்துக்கும் நல்ல வருமானம் கிடைப்பதாகவும் தெரிவித்தார்."

ஆசிரியருக்குக் கடிதம்

எமக்காவது பேறு கிடைக்குமா?

பிரசல வேதனையை அனுபவித்த ஒரு பெண்ணுக்குத்தான் அதன் வேதனையை நன்கு உணர முடியும். ஒரு ஆணுக்கு அதை எவ்வளவுதான் விரித்து எடுத்துரைத்தாலும் அவனால் அதைஉள்ளபடி உணர முடியாது.

அதுபோல் ஈழத்தின் வடபகுதியிலே ஒடுக்கப்பட்டு மனித உரிமை அற்றுவாழும் சிறுபான்மைத் தமிழ்மக்களின் நிலையும் உள்ளது. ஆலயங்களிலும் தேநீர்ச்சாலை, உணவு விடுதிகள் போன்ற பலவற்றிலும் எமது மக்கள் அனுபவித்துவரும் வேதனையை உள்ளபடி தமிழ்த் தலைவர்களோ தமிழ்ப் பெருங்குடி மக்களோ உணர்வதாக இல்லை. அவர்கள் எமது நிலையை உணர்ந்திருந்தால் எமக்கு இதுவரையிலாவது விமோசனம் கிடைத்திருக்கும்.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாக தமிழ்ப்பெரும் மக்களும் நாம் அனுபவிப்பது போன்ற ஒருவேதனையை அனுபவித்து வருகிறார்கள். இது கடவுளால் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஒரு தண்டனை என்று கூறினாலும் மிகையாகாது.

சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களை மொழி, இன அடிப்படையிலே பாரபட்சமாக நடத்துகிறது. அடிப்படை உரிமையை மறுக்கிறது. தமிழரை இரண்டாந்தரப் பிரஜைகளாக மதிக்கிறது என்றெல்லாம் கூறப்படுகிறது. ஐக்கியநாடுகள்சபைவரை இப்பிரச்னை எட்டிவிட்டதை அறிந்து நாமும் தமிழர் என்ற ரீதியில் மகிழ்ச்சியடைகிறோம். இப்போது அரசாங்கம்தமிழ்த் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை அறிந்து நாமும் கூடிய உவகை கொள்கிறோம். ஆனால் அதேநேரத்தில் எமது இதயத்தில் இனம் புரியாத ஒரு ஏக்கம் இருந்து வருகிறது.

தாம் நசுக்கப்பட்டு அதனால் சொல்லொணா வேதனையை அனுபவிக்கும் இந்நேரத்திலாவது எமது குறைபாடுகளை மறுக்கப்படும் மனித உரிமைகளைப்பற்றி நினைக்காமலிருக்கும் தமிழ்மக்களை அவர்களது பண்பாட்டை நாம் குறைகூறவில்லை. சிந்திக்கும்படி பணிவுடன் கேட்கிறோம். மனித உரிமை இழந்திருக்கும் இரண்டரை லட்சம் மக்கள்பேரால் கேட்கிறோம்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் சாவகச்சேரி நகரசபைப் பகுதியிலிருக்கும் ஒரு தேநீர்க்கடையிலும் இங்குள்ள ஒரு செல்வாக்குள்ள ஒரு 'தமிழன்பர்' வீட்டிலும் நான் பெற்ற அனுபவத்திலிருந்து தமிழனாகப் பிறந்ததன் பெருமையை மறந்து தமிழனாகப் பிறந்தது எனது துர்திர்ஷ்டம் என நினைத்தேன்.

தமிழ்த்தலைவர்கள் சிலர் மேடையில் கூடப் பேசுவதற்குப் பயப்படுகிறார்கள். சிலர் பேசுவதோடு நின்றுவிடுகிறார்கள். சில பெரியார்கள் செயலில் காட்டியதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

நாமும் மற்றவர்களைப் போலச் சுதந்திரமுள்ள மனிதர்களாய் வாழ ஆசைப்படுகிறோம். தன்மானமுள்ள சுதந்திரமான வாழ்வைக் காணாமல் எமது சுதந்திரத்துக்காக ஆயிரக்கணக்கான முன்னோர்கள் இறந்துவிட்டனர். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழும் எமக்காவது அந்தப் பேறு கிடைக்க வழி செய்வார்களா?

க. நடராசா,
இணைச்செயலாளர்,
மக்கள் முன்னேற்ற மன்றம்.

ஐயாறன் எழுதுவது

"மருந்துக்கு ஒரு சிலை" என்று, யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினர் வெளியிடும் "சுகாதார ஒலி" என்ற வெளியீட்டில் ஒரு தலையங்கம் வெளியாகியுள்ளது.

"மலைகளைக் குடைந்து சிற்பங்களையும் சிலைகளையும் செதுக்கிய தமிழர் பரம்பரை வாழும் யாழ்நகரில் மருந்துக்கும் ஒரு சிலை இல்லாதது மனோதத்துவ ஆராய்ச்சிக்கு ஒரு நல்ல விஷயவித்தாகும்... மலை மருந்து, யாழ்நகரம்,நன்றி உணர்வு இவற்றைப் பற்றி எழுதும் போது எம்மிடையே கொடை மலையாக இருந்தவரும், மருந்தை விருந்தாகப் படைத்தவரும், யாழ்நகரின் ஒரு சகாப்த நாயகனுமான டாக்டர் பி. எஸ். தான் எமது ஞாபகத்துக்கு வருகிறார். அவருக்கு ஒரு ஞாபகச் சின்னம், அவர் சின்ன உருவைக் கொண்ட சிலையாக சுப்பிரமணியம் பூங்காவில் நின்றால் என்ன! இதைப்பற்றி யாழ் மக்கள் சிந்தித்தால், ஓர் ஆண்டு முடிவதற்குள் மருந்துக்கு ஒரு சிலையை யாழ் நகரில் காண முடியும்..." என்று கூறுகின்றது.

இது மிக முக்கியமான யோசனை. வாரி வாரிக் கொடுத்த வள்ளலான டாக்டர் பி. எஸ்ஸுக்கு இப்படி ஒரு சிலையை வைக்காவிடில், அது நம் நகருக்கே ஒரு பெரிய இழுக்கு. செய்நன்றி மறந்த பாபமுமாகும். இந்த நல்லயோசனை சீக்கிரத்தில் நிறைவேறுமென்றும், யாழ் பொதுமக்கள், இதற்குத் தாராளமாக உதவ முன் வருவார்கள் என்றும் நம்புவது மிகையல்ல.

*

இதே வெளியீட்டில் யாழ் நகரின் சுகாதாரம் பற்றி மாநகர முதல்வர் துரைராசா அவர்கள் எழுதியுள்ள கட்டுரையில், நகரை அழகாக சுத்தமாக வைத்திருக்க சில யோசனைகளைக் கூறியுள்ளார். வளவிலுள்ள மரங்களை தெருவில் வெட்டிப் போடுவதும், கல்யாணம் முடிந்ததும் வாழை சோடனைகளை தெருவில் போடுவதும், கூடாதென்றும் அவரவர்களே வண்டிகளில் ஏற்றி குப்பை கொட்டும் இடத்தில் சேர்ப்பதே முறையென்றும் நயமாகக் கூறுகிறார்.

இப்போது பல வீடுகளிலும் வாளி மல கூடங்களே உள்ளன. சுகாதார முறையில் இது பின் தங்கியதாகுமென்றும், புதிதாக வீடு கட்டுபவராவது குழி மல கூடங்களைக் கட்ட வேண்டுமென்றும் கேட்டுள்ளார். புதிய வீடு கட்டுதல், பழைய வீட்டைத் திருத்துதல், வீதிகள் இவை பற்றியும் பல குறைகளை இடித்துக் கூறுகின்றார். நகரின் பொது நலனை முன்னிட்டு, மக்கள் இவற்றை மதித்து நடக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

* *

"கூவின பூங்குயில் கூவின கோழி, குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்...என்றும், இன்னிசை வீணையர் யாழினர் ஒரு பால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்..." என்றும் அதிகாலையில் நம்மை பல இனிய ஒலிகளும் தட்டி எழுப்புவதாகப் பாடியுள்ளார்

(6-ம் பக்கம் பார்க்க)

"அகதிகளுக்கு இந்தியா வாசலை திறந்துவைத்திருக்கும்"

காங்கிரஸ் பார்லிமெண்டரி கூட்டத்தில் பிரதமர் நேரு

காஷ்மீரில் திரு. சாஸ்திரி பேச்சுவார்த்தை

புதுடில்லி, பெப். 21

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வரும் அகதிகளுக்கு இந்தியா தன் வாசலை எப்போதும் திறந்து வைத்திருக்கும் என பிரதமமந்திரி திரு. நேரு காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சிக் கூட்டத்தில் கூறினார்,

அகதிகளின் மறுவாழ்வுக்கு மத்திய அரசாங்கமும் மேற்கு வங்க அரசாங்கமும் முழுப் பொறுப்பையும் ஏற்கும் எனவும் அவர் கூறினார்.

பாதுகாப்புசபையில் பாகிஸ்தானின் நோக்கம் நிறைவேறவில்லை என்று கூறியநேரு, காஷ்மீர் சென்றிருக்கும் திரு. லால்பகதூர் சாஸ்திரி,பிரச்னை தீர்ப்பதற்கு உதவி செய்வார் என்றார். காஷ்மீரில் வகுப்புக் கலவரம் இல்லை என்றும் அவர் கூறினார்.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வரும் அகதிகள் விஷயமாக அவசரகால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 3600 வீடுகள் அவர்களுக்காகக் கட்டப்படுகின்றன. கூடாரவசதிகளும் அளிக்கப்படுகின்றன.

ஐ. நா. பாதுகாப்பு சபைக்குச் சென்றிருந்த இந்தியப் பிரதிநிதி திரு. சக்ளா நேற்று மாலை புதுடில்லி திரும்பினார்.

பாலம் விமானநிலையத்தில் அவர் பேசியபோது பாதுகாப்புசபையில் பாகிஸ்தானுக்குப் பெருந்தோல்வி ஏற்பட்டதாய்க் கூறினார். காஷ்மீரில் கலகம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியா அதைத்தன்னுடன் இணைத்திருக்கிறது என்ற இரு பிரச்னைகளை பாகிஸ்தான் கொண்டுவந்ததென்றும் இரண்டிலும் அது தோல்வியடைந்தது என்றும் திரு. சக்ளா கூறினார். காஷ்மீர் ஏற்கனவே இந்தியாவின் ஒரு பாகமாகிவிட்டது எனவும் திரு. சக்ளா குறிப்பிட்டார்.

காஷ்மீர் பிரச்னை நிகழ்ச்சிநிரலில் தொடர்ந்து இருந்தபோதிலும் பாதுகாப்புசபை இவ்விஷயத்தில் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை என்றும அவர் கூறினார்.

"புதிதாக பாதுகாப்புசபைக்குச் செல்லும் பொருட்டு புதிய நெருக்கடிகளை பாகிஸ்தான் உண்டுபண்ணக்கூடும். ஆனால் நாம் விழிப்பாய் இருக்க வேண்டும்" என்றார் சக்ளா.

தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர எந்த நாடும் விரும்பவில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

"சபையில் பிரிட்டிஷ் பிரதிநிதியின் பேச்சு கோபத்தை உண்டுபண்ணியிருக்கிறது. பொதுக் கருத்து ஒன்றை உருவாக்க அமெரிக்காவும் பிரிட்டனும் விரும்பின. ஆனால் பூட்டோ வெறுங்கையுடன் திரும்ப வேண்டும் என நான் விரும்பினேன். அதுபோல் அவர் வெறுங்கையுடன் திரும்பினார்" என்றும் சக்ளா கூறினார்.

இதற்கிடையில் காஷ்மீர் சென்றிருக்கும் திரு. சாஸ்திரி, பிரதமர் ஷங்சுதீனைச் சந்தித்துப் பேசினார். ஸதிரிநியாஸத் டாக்டர் கரன்சிங்கையும் சந்தித்து நீண்டநேரம் அவர் பேசினார். திரு. சாஸ்திரி 3 நாள் அங்கு தங்குவார்.

பிரயாணப்பத்திரம் இன்றியே இந்தியாவுக்குள் வரலாம்

கிழக்குபாகிஸ்தான் ஹிந்துக்களுக்குசலுகை

புதுடில்லி, பெப். 21

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வர விரும்பும் ஹிந்துக்கள், பிரயாணப்பத்திரம் இன்றியே அனுமதிக்கப்படுவார்கள் என உள்நாட்டுமந்திரி திரு. நந்தா, ராஜ்யசபையில் உபராஷ்டிரபதியின் உரைமீதான விவாதத்தைமுடித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

திட்டமிட்ட முறையில் அவர்களைக் குடிபெயரச் செய்வது சாத்தியமில்லையென்றும் அவர் கூறினார்.

இந்தியாவுக்குள் வரும் அகதிகளுக்குஉதவி, மறுவாழ்விப்பு ஆகிய வசதிகள் செய்துதரப்படுகின்றன என்றும் அவர் கூறினார். கிழக்குப் பாகிஸ்தான் கலவரத்தில் இறந்தவர்களின் தொகை அதிகமானது என்றும், ஆனால் இறந்தவர்கள் எத்தனைபேர் என்பது தெரியவில்லை என்றும் அவர் கூறினார். கொள்ளை, தீ வைத்தல், ஓடிவந்தவர்களைக் கொலை செய்தல் ஆகிய வருந்தத்தக்க சம்பவங்களும் நடைபெற்றன என்று அவர் கூறினார்.

"இந்தியாவைப் பொறுத்தவரை சிறுபான்மையினருக்கு நாம் முழுப் பாதுகாப்புஅளிப்போம்" என்றார் நந்தா.

குல்னாவில் ஏற்பட்ட கலகத்தின் விளைவே மேற்கு வங்கக் கலவரம் என்றும் காஷ்மீரில் புனிதச் சின்னம் திருட்டுப் போனபின் பாகிஸ்தான் தலைவர்களின் ஆத்திரமூட்டும் பேச்சுக்களே குல்னாவில் கலவரத்தைத் தோற்றுவித்தது என்றும் அவர் அவர் கூறினார்.

ஸான்ஸிபாரில்

பிரிட்டிஷ், அமெரிக்க தூதர்கள் அகற்றப்பட்டனர்

ஸான்ஸிபார், பெப். 21

ஸான்ஸிபாரிலுள்ள பிரிட்டிஷ், அமெரிக்கத் தூதர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இந்த நாடுகள் இன்னும் அங்கீகரிக்காததே இதற்குக் காரணமென அறிவிக்கப்பட்டது.

ஸான்ஸிபாரை அங்கீகரிக்கும் விஷயம் பற்றி பிரிட்டன் விரைவில் முடிவுசெய்யுமென பிரிட்டிஷ் மந்திரி திரு. டங்கன் சாண்ட்ஸ் பார்லிமெண்டில் அறிவித்தார். திரு. சாண்ட்ஸ் கிழக்காபிரிக்க நாடுகளுக்கு விஜயம்செய்யவிருக்கிறார்.

சிறைதப்பிய புரட்சிக்காரர்

லிப்ரிவில்லி பெப். 21

அடுத்த வாரம் நடைபெறவிருந்த கெபோன் தேர்தல் மே மாதம் முதல் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. புரட்சி செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என ஜனாதிபதி எம்பா அறிவித்தார். புரட்சியை நடத்தியதாகக் கூறப்படும் இருவர் சிறையிலிருந்து தப்பியோடி விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

கோலோனில் கோலாகல விழா

கோலோன், பெப். 21

கோலோன் "ஆஷ் வெடனிஸ்டே" எனப்படும் விசேடப் புதன்கிழமைக்கு ஒரு வாரம் முன்னதாகவே ரைன்லாந்தில் விசேடக் கொண்டாட்டங்கள் வருடா வருடம் நடைபெறுவது வழக்கம். ஒரே கூத்தும் கும்மாளமும் பிறர் "முட்டாள் தனம்" என்று கூறும் அளவுக்கு கொட்டம் அடிப்பதும் வழக்கம். இந்த மக்கள், குஷியையும் கோலாகலத்தையும் காணவேண்டி ஏராளமான உல்லாசப் பிரயாணிகள் இங்கு விஜயம் செய்வது வழக்கம். கேலோன் டஸ்ஸல்டிராப், மெயின்ஸ் ஆகிய நகரங்களில் இக்கோலாகலம் விசேஷ திருவிழா மாதிரியே இருக்கும். "ரோள்" திங்கள் ஊர்வலப் பவனி கண்கொள்ளாக் காட்சியாக விளங்கும்.

இந்த குதூகல விழா ரைன்லாந்திலேயே இடத்திற்கு இடம் ஒவ்வொரு விதமாகக் கொண்டாடப்படுகிறது. மக்கள் இங்கு மற்றவர்களை முட்டாள்களாக்குவதில்லை. தாங்களே முட்டாள்கள் போலாகிறார்கள்.

வியாழக்கிழமை தொடங்கி "ஆஷ்" புதன்வரை ஒரு வாரம் எவ்வித சண்டை, சச்சரவு, கோர்ட் விவகாரம் எதுவும் கிடையாது. ஒருவரை ஒருவர் எதிர்த்துக்கூட பேசமாட்டார்கள். நோட்டீஸ் விடுவது, கோர்ட்டுத் தீர்ப்புகளை அமுல் செய்வது, வாரண்ட் கெடுபிடி எல்லாம் அந்த ஒரு வாரத்தில் நிறுத்தி வைக்கப்படும். இரவு முழுவதும் நடனம் வேடங்கள் அணிவது, புதுப் புது ஆடைகள் விதவிதமான ஆடைகள் இவைகளணிந்து குதூகலமாக மக்கள் கூத்தாடுவர். அந்தஸ்து, பெரியவர், சிறியவர், முதலாளி, தொழிலாளி, பணக்காரர், ஏழை முதலியவை பாராட்டப்பட மாட்டாது.

குஷியில் குஷியாயிருப்பது தான் அவர்களின லட்சியம். எவ்வளவுக்கெவ்வளவு பைத்தியக்காரத்தனமாக ஆடை அணியப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு உற்சாகம் அதிகம். பொலிஸ்காரர் எதையும் கண்டும் காணாதவர்போலிருந்து விடுவார். இதைத்தான் செய்ய வேண்டும இப்படித்தான் செய்ய வேண்டும் என்பதெல்லாம் கட்டுப்பாடு எதுவும் கிடையாது. அவரவர்களுக்கு உசிதமாக எது தோன்றுகிறதோ அவைகளை அவரவர்கள் செய்வார்கள. எங்கும் பாட்டு, கூத்து, ஆட்டம் நடுத்தெருவில் முன்பின் அறியாதவர்கள் கூட ஒருவரை ஒருவர் முத்தமிட்டுக் கொள்வார்கள். வெளியிடத்தவர்களுக்கு இதைப்பார்க்க விநோதமாக இருக்கும்.

மாலை வேளைகளில் சத்திரம், சாவடி, நடன மண்டபம் ஆகியவைகளில் மக்கள் கூட்டம் காணப்படும். மதுபானமும் பாவிக்கப்படும்.இந்த உற்சாகத்தில் களைப்பு, தொண்டைக் கட்டு எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். மறுநாள் காலை களைப்பு, தலைவலி இவை இருந்தாலும், மீண்டும் மாலையில் உற்சாகம் பொங்க ஆரம்பித்து விடும். முன்பின் அறிமுகமில்லாதவர்கள் கூட மிக சகஜமாகப் பழகுவார்கள்.

"ஆஷ்" புதன்கிழமையன்று எல்லோருமே களைத்துக் காணப்படுவார்கள். இந்த ஒரு வாரம் வாழ்க்கை எவ்விதக் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டதன்று.

சென்னைகார்ப்பரேஷன் தேர்தல் பிரசாரம்

எம். ஜி. ஆர். விஜயத்தை தொடர்ந்து கல்வீச்சு

சென்னை, பிப் 21

தமிழ்நாட்டில் -பலநகரசபைகளில் காங்கிரஸ் வெற்றியடைந்துள்ளதன் காரணமாக சென்னை நகர கார்ப்பரேஷன் தேர்தலிலும் அதற்கு நல்ல பலன் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்க்கட்சிகள் இதன் காரணமாகத் தங்கள் வசதிகள் அனைத்தையும் திரட்ட முனைந்துள்ளன என்று கூறப்படுகிறது.

பிரபல சினிமா நடிகர்கள் நட்சத்திரங்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் சேவைகளை தி. மு. க. பயன்படுத்திக் கொள்ள தொடங்கியுள்ளது.

24-வது டிவிஷனுக்கு எம். ஜி. ராமச்சந்திரன் விஜயம் செய்ததை அடுத்து அங்கு லேசாகக் குழப்பம் ஏற்பட்டதாகவும், கல்வீச்சு நடந்ததாகவும் கூறப்படுகிறது. டிவிஷனில் ஒரு பகுதியினர் கொதிப்படைந்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது. தோரணங்களும் கட்சி சின்னங்களும் பிடுங்கி எறியப்படுவதாகவும்புகார்கள் கூறப்பட்டன. புகார்களுக்கும் பதில் குற்றச்சாட்டுகளுக்கும் ஆதாரமில்லை என்றும் அப்பகுதியில் நிலைமைஅமைதியாக உள்ளதாகவும் பொலிசார் கூறினர்.

சூ-என்-லாயை சந்திக்க நேரு மறுத்தாராம்

நியூயோர்க் 'டைம்ஸ்' தகவல்

வாஷிங்டன், பிப் 21

சூ-என்-லாயைச் சந்திக்க நேரு மறுத்துவிட்டதாக, ரங்கூனிலிருந்து 'நியூயோயோர்க் டைம்ஸ்' பத்திரிகைக்குக் கிடைத்துள்ள செய்தி கூறுகிறது. சமீபத்தில் புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்தபோது பர்மிய அதிபர் நீவின் இத்தகைய சந்திப்பை வற்புறுத்தியதாக கூறப்பட்டது. கொழும்புப் பிரேரணைகளைப் பூரணமாக ஏற்றுக்கொண்டாலன்றிபேச்சுவார்த்தை நடத்துவதற்கில்லை என திரு. நேரு நீவின்னிடம் எடுத்துரைத்ததாகத் தெரிகிறது.

பாகிஸ்தானுக்கு சூ விஜயம் சம்பந்தப்பட்டவரை அவரது பிரசங்கங்களைப்பற்றி அமெரிக்கா கவலைப்படவில்லை என்றும் ஆனால் அவரது விஜயத்தினால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியே அக்கறை கொண்டிருப்பதாயும் 'பால்டிமோர்சன்' பத்திரிகை கூறியது.

லோகசபையில் லால்பகதூர் சாஸ்திரியின் பேச்சும் ரங்கூனில் சூ-என்-லாய் நீவின் கூட்டறிக்கையும் பற்றிச் சில ஹேஷ்யங்கள் தோன்றியுள்ளன. சீன- இந்தியா எல்லைத் தகராறு குறித்து ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலைக்குப் பைசல் காணப் புது முயற்சி மேற்கொள்ளும் சாத்தியக்கூறைப்பற்றி ஹேஷ்யங்கள் நிலவுகின்றன.

பாலயோகியின் 19 ஆண்டு நிஷ்டை

அமலாபுரம், பெப். 21

விசால ஆந்திரப் பிரதேச கிழக்கு கோதாவரி ஜில்லா, அமலாபுரம் தாலூகா, மும்முடிவரம் கிராமத்தில் கடந்த 19 ஆண்டுகளாக ஊண் உறக்கமின்றி ஸ்ரீ பாலயோகி நிஷ்டையில் இருக்கிறார். அவரது இளைய சகோதரரும் கடந்த 12 ஆண்டுகளாக அதே நிலையை அனுசரித்து வருகிறார். இவர் ஒவ்வொரு ஆண்டும் மகாசிவராத்திரிக்கு மறுநாள் அமாவாசையன்று பக்தகோடிகளுக்குத் தரிசனம் தருகிறார். இவ்வாண்டு வழக்கம் போல் பெப். 12-ம் திகதி அதிகாலை 4-45 மணி முதல், மறுநாள் அதிகாலை 1-30 மணி வரை சற்றேறக் குறைய 20 லட்சம பக்தகோடிகளுக்குத் தரிசனம் கொடுத்தார். இவரது பெயர் கடிகதலைப்பாராவ். தற்போது வழங்கும் பெயர் ஸ்ரீ பாலயோகி. வயது 35. இவர் ஹரிஜன வகுப்பில் ஏழைக் குடும்பத்தில் உதித்தவராம்.

"தொடர்ந்து எதிர்ப்போம்"

ஜாகர்த்தா, பெப். 21

மலேஸிய எதிர்ப்பியக்கத்தை இந்தோனேஷியா தொடர்ந்து நடத்தும் என ஜனாதிபதி சுகர்னோ கூறினார். இந்தோனேஷியாவுக்குப் பொருளாதார உதவி நிறுத்தப்பட்டாலும் இக்கொள்கையையே அது பின்பற்றுமெனக் கூறிய அவர், இந்தோனேஷியா மூலவளம் நிறைந்த நாடு எனக் கூறினார்.

இந்தியாவுக்கு 21 புதிய கப்பல்கள்

புதுடில்லி, பெப். 21

2, 20, 000 டன் நிறையுள்ள 21 புதிய கப்பல்களுக்கு இந்தியக் கப்பல் கம்பெனி ஆர்டர் கொடுத்திருக்கிறது. 4 ஆண்டுகளில் இது கட்டி முடிக்கப்படும். இதன் மூலம் இந்தியாவின் கப்பல் பலம் இரட்டிப்பாகும். பெரிய அளவான 5 "கெரியர்" களுக்கும் அது ஆர்டர் செய்திருக்கிறது.

சைப்பிரஸ்

நியூயோர்க், பெப். 21

ஐ. நா. பாதுகாப்புச் சபை யு தாண்டின் யோசனைப்படி வருகிற திங்கட்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டது. சைப்பிரஸ் சம்பந்தமாக திரைமறைவில் பேச்சு நடத்த சம்பந்தப்பட்ட சாராருக்கு வாய்ப்பளிக்குமுகமாக ஒத்திவைப்புக் கோரப்பட்டது.

சர்வதேசப்படை அனுப்புதல், மத்தியஸ்தர் ஆகிய விஷயங்கள்பற்றி பொதுவான உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக சைப்பிரஸிலுள்ள கிரேக்க பிரதிநிதி கூறினார்.

சைப்பிரஸின் சுதந்திரத்திற்கு பிரிட்டன், துருக்கி, கிரீஸ் ஆகிய நாடுகள் உத்தரவாதமாய் இருக்கவேண்டும் என்பதை ஒத்துக்கொள்ள முடியாது என சைப்பிரஸ் அறிவித்திருக்கிறது.

வீதியில் சென்ற லொறி கடைக்குள் பாய்ந்தது!

இருவர் ஆஸ்பத்திரியில்!

மாவிட்டபுரம், வெள்ளி

பாதையைவிட்டு விலகிய லொறி ஒன்று சைக்கிள் கடையில் மோதியதோடு அங்கிருந்த இருவரை படுகாயப்படுத்தி சைக்கிள் கடைக்கு அருகேயுள்ள வாபர்சலூன், மில் ஆகியவற்றையும் சேதமடையச் செய்த சம்பவமொன்று நேற்றுக்காலை மல்லாகத்தில் நடந்துள்ளது.

இதுசம்பந்தமாக பொலிஸ் விசாரணையில் கூறப்பட்டதாவது: ஏழாலையைச் சேர்ந்த குட்டித்தம்பி கனகரத்தினம் என்பவர் யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கி லொறி ஒன்றைச் செலுத்திக் கொண்டு வந்தார். இந்த லொறிச்சாரதி ஒரு மோட்டார் சைக்கிளுடன் போட்டி போட்டு லொறியை செலுத்திக் கொண்டுவந்த சமயம், மல்லாகம் சந்திக்கருகே கார் ஒன்றை விலத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. காரை விலத்தமுடியாத லொறிசாரதி காரின் பின்னால் லொறியை திருப்பிவிட்டார். இதனால் லொறி கே. இரத்தினம் என்பவருக்குச் சொந்தமான சயிக்கிள் கடையில் மோதியது.

அந்த சயிக்கிள் கடையில் மல்லாகம் தபால் சேவகர் ரி. நடராசாவின சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்த கனகேந்திரத்தையும் தபால் சேவகர் நடராசாவையும் படுகாயப்படுத்தியதோடு மோதிய சைக்கிள் கடையுடன் இணைந்திருந்த வாபர்சலூனையும் மில்லையும் சேதப்படுத்தியது,

கனகேந்திரம் அபாயகரமான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலும், நடராசா காங்கேசன்துறை ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். கடைகள் பலத்த சேதத்திற்குள்ளாகியது. லொறி சாரதியை சப்இன்ஸ்பெக்டர் தியாகராசா மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எப். எச். அத்துறபாணு முன்னிலையில் ஆஜர் செய்தார். நீதிபதி சாரதியை ரூபா 250 பிணையில் செல்லும்படி உத்தரவிட்டார். லொறி பொலிஸ் பாதுகாப்பிலிருக்கிறது.

"பெற்றோலுக்கும் 'கியூவில்' நிற்கவேண்டும்"

மிரிகம, வெள்ளி

அரசாங்கத்தின் முரண்பாடான நடவடிக்கைகளால் நாடு இன்று பெரும் சிக்கலில் மாட்டப்பட்டுள்ளது. இன்னும் ஆறு மாதங்கள் சென்றபின் மக்கள் அரிசி வாங்கக்கூட பணமில்லாது கஷ்டப்படுவார்கள். இதனால் மேலும் பல சிக்கல்கள் ஏற்படும் என்று மிரிகம எம். பி. திரு. விஜயபாகு விஜயசிங்கா மிரிகம ஆரம்பபாடசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

தனிப்பட்ட வியாபார ஸ்தாபனங்கள் தடைசெய்யப்பட்டால் இந்நாடு நிச்சயமாக கம்யூனிஸ்ட் நாடாகிவிடுமென்றும், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம்ஒரு கூட்டுறவு ஸ்தாபனமல்லவென்றும் அது ஒரு அரசாங்க ஸ்தாபனமாகிவிட்டதென்றும், விரைவில் மக்கள் பெற்றோல் பெறுவதற்கும் 'கியூ'வில் காத்து நிற்கவேண்டிய நிலை ஏற்படுமென்றும் அவர் தொடர்ந்து பேசும்போது கூறினார்.

ஷில்லாங்

ஷில்லாங், பெப். 21

ஷில்லாங்கில் தொடர்ந்து அமைதி நிலவி வருகிறது. காலை முதல் மாலை வரை அங்கு ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்

பஸ் பிரயாணி மயங்கி விழுந்தார்

கொடிகாமம், வெள்ளி

யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்த பஸ்ஸை நோக்கி நுணுவில் சந்திக்கு அருகே இனந்தெரியாத நபர் ஒருவர், [illegible] எறிந்ததன் விளைவாக பஸ் பிரயாணி ஒருவர் நெற்றியில் பலத்த காயமடைந்து பஸ்ஸில் மயங்கிவிழுந்தார். பஸ்ஸிலிருந்து சக பிரயாணிகளும் கண்டக்டரும் அவருக்கு முதலுதவியளித்தார்கள்.

அப்பிரயாணி தான் தொடர்ந்து பிரயாணம்செய்ய விரும்பவில்லையென்றும், தன்னை ஒரு கார் மூலம் எழுதுமட்டுவாளிலுள்ள தனது வீட்டிற்கு அனுப்பும்படியும் கூறியதைத் தொடர்ந்து பஸ் கண்டக்டர் அவரை ஓர் காரில் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.

தில்லையாற்றுப் பாலத்தின் அவல நிலை

அக்கரைப்பற்று, வெள்ளி

அக்கரைப்பற்று — சாகாமம் பிரதான வீதியில் இருக்கும் தில்லையாற்றின்மீது போடப்பட்ட பாலம் சீர்கெட்டு எந்த நேரத்தில் பாலத்தின்மீது போடப்பட்டிருக்கும் பலகைகள் கழன்று ஆற்றிலே விழுந்துவிடுமென்று சொல்லமுடியாத அபாயமான நிலையில் இருக்கிறது. இந்தப் பாலத்தை ஒரு நவீனபாலமாக அமைக்குமாறு பலமுறை பணங்காட்டுப் பகுதியில் வாழும் மக்கள் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோதிலும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

அக்கரைப்பற்றுப்பகுதியிலுள்ள விவசாயிகளின் பெருந்தொகையான வயல்நிலங்கள் எல்லாம் அந்தப் பாலத்துக்கு அப்பால்தான் இருக்கிறது.

லண்டன் பரீட்சைகள் 1968-வரை நீடிக்கும்

கல்வி மந்திரி உறுதி

கொழும்பு, வெள்ளி

இலங்கையில் லண்டன் பல்கலைக்கழக பரீட்சைகள ரத்துச் செய்யப்பட்டுள்ளபோது பிரதமரின் புதல்வி ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு எவ்விதம் அனுமதிக்கப்படலாம் என வண. மிதிகம உபரத்தன தலைமையில் கல்வி மந்திரியைச் சந்தித்த தூதுக்கோஷ்டியினர் மந்திரியிடம் கேட்டனர்.

லண்டன் பல்கலைக்கழக பரீட்சைகளும், ஜி. ஸி. ஈ. உயர்தர வகுப்பு பரீட்சைகளும், பட்டப் பரீட்சைகளும் தொடர்ந்து இங்கு இருக்க வேண்டுமென கோரிக்கை விடுக்குமுகமாக இன்று இத்தூதுகோஷ்டியினர் கல்வி மந்திரியைச் சந்தித்தனர்.

இந்தப் பரீட்சைகள் 1966-ம் வருடத்திலிருந்து 1968-ம் வருடம் வரை நீடிக்கப்படுமென இத்தூதுகோஷ்டியினருக்கு மந்திரி உறுதியளித்தார்.

கலைச்செல்வி 2-வது கலைவிழா

யாழ்ப்பாணம், சனி

ஈழநாட்டில் சென்ற ஆறு ஆண்டுகளாக சிறந்த முறையில் வெளிவந்துகொண்டிருக்கும் இலக்கிய மாத இதழான 'கலைச்செல்வி'யின் சார்பில் ஆண்டுதோறும் நடைபெறும் கலைவிழா, சென்றமுறை வவுனியாவில் நடைபெற்றது. இம்முறை ஏப்ரல் 25, 26, 27-ந் திகதிகளில் சிறந்த முறையில் யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடாகியுள்ளது. இவ் விழாவில் இயல்-இசை-நாடகங்களுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படும். இளம் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும் தமிழ்நாட்டிலிருந்தும் சில பெரியார்கள் இவ் விழாவில் கலந்துகொள்ளுவார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

சோர்வுப்பிணி என்னை ஏன் பீடிக்காது!
HORLICKS

ஹார்லிக்ஸ் அளிக்கும் நன்மைக்கு ஒரு உதாரணம்:

சோதிடப்படி எனக்கு நல்ல காலம் இல்லை—

"எப்படிப்பட்ட புத்திசாலி? நீயும் உன் சோதிடப் பித்தும்", என்று உரிமையுடன் கடிந்து கொண்டாள் சின்னம்மா, சரோஜா. "சோதிடம் என்னவோ உண்மையாயிருக்கலாம், ஆனால் உன் உடல் சோர்வுக்கு சோதிடம் வழிகாட்டாது", என்றாள்.

"என் நிலைமை தெரிந்தால் இப்படி கேலிசெய்ய மாட்டீர்கள்." என்றேன். "ஏன் தெரியாது? தளர்ச்சியும் அசதியுமாய் வீட்டு வேலைகளைக் கூட அவதானிக்க முடியாமல் கஷ்டப்படுகிறாய்" என்றாள் சித்தி. "என் உடம்பில் வேறு கோளாறு இல்லையா?" என்றேன். "டாக்டரைத்தான் கேட்க வேண்டும்" என்பது சின்னம்மாவின் பதில்.

"டாக்டர் என்ன சாதித்துவிடப் போகிறார்." என்றேன் சலிப்புடன். ஆனால் சின்னம்மா விடாப்பிடியாக டாக்டரிடம் அழைத்துச் சென்றாள். டாக்டர் சொன்னதும் எனக்குச் சரியென்றுதான் தோன்றியது. "உங்கள் உடம்பில் கோளாறு ஒன்றும் இல்லை. உங்களுக்கு சோர்வும், பலவீனமும் தோன்றுவது உடலுக்குத் தேவையான போஷாக்குக் கிட்டுவதில்லை என்பதற்கு அறிகுறி. நீங்கள் தினமும் ஹார்லிக்ஸ் அருந்திவரவேண்டும்" என்றார் டாக்டர்.

நோயாளிகளுக்கும், பலவீனர்களுக்கும் டாக்டர்கள் சிபார்சு செய்யும் ஹார்லிக்ஸையா நானும் அருந்துவது! எனக்கு என்னவோ போலிருந்தது. அன்றிரவு நண்பரிடம் இதைப் பற்றிக் கேட்டேன். "டாக்டர் சொன்னபடியே செய்யுங்கள்" என்று அடித்துச் சொன்னார் நண்பர்.

நல்ல நாளும் கிழமையும் கூடிய தினத்தில் ஹார்லிக்ஸ் அருந்தத் தொடங்கினேன். அருந்தத் தொடங்கிய நாள் தொடக்கம் எனக்குச் சோர்வே இல்லை. இவ்வளவு மகிழ்ச்சியும் சுறுசுறுப்பும் எனக்கு இதுவரையில் இருந்ததே இல்லை, சரோஜா சின்னம்மாவுக்கும் ஒரே ஆனந்தம்! டாக்டர் என்னை ஹார்லிக்ஸ் பருகும்படி சொன்னது என்னுடைய நல்ல காலம் தான்!

ஹார்லிக்ஸ் அதிக சக்தியளிக்கிறது!

வானொலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

சனி 22-2-64

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-55 சைவநற்சிந்தனை, 7-15 வாய்ப்பாட்டு, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 இவ்வார நிகழ்ச்சிகள், 7-00 இசை நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 பேச்சு, 8-30 இஸ்லாமிய கீதம், 8-45 ஹிந்துஸ்தான் கீதம், 9-15 பேச்சு—தமிழ் இலக்கியம், 9-30 வயலின், 10-00 நேயர்விருப்பம்.

ஞாயிறு (23-2-64)

காலை 6-45 உதய கீதம், 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 வாய்ப்பாட்டு, 7-45 மெல்லிசை, 8-00 பௌத்தபோதனை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறு பாடசாலை, 9-30 கத்தோலிக்க நிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர் விருப்பம், 1-00 பெண்கள் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வாய்ப்பாட்டு, 5-45 திரை இசை,

இரவு 6-10 சங்கீதம், 6-15 கோயில் நிகழ்ச்சி அஞ்சல், 6-45 வாய்ப்பாட்டு. 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 மாணவர் மன்றம், 8-30 நேயர் விருப்பம், 9-15 பெண்கள் விருப்பம், 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்:

திருச்சி

சனி (22-2-64)

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 வேதவல்லி ராமசாமி—வயலின்.

பகல் 1-00 பிள்ளைக்கனி அமுது, 1-20 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 வேதவல்லி ராமசாமி—வயலின்.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 வாத்திய இசை.

இரவு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 நாடகவிழா—'செர்வர்சுந்தரம்'—கே. பாலசந்தர் எழுதிய நாடகம்—ராகினி ரெக்ரியேஷன் கிளப், 8-40 தேசபக்திப்பாடல்கள். 9-30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி.

ஞாயிறு (23-2-64)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள் வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 பாலக்காடு டி. வி. கிருஷ்ணமூர்த்தி—பாட்டு, 8-15 என். சி. சௌந்தரவல்லி—பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 நாகர்கோயில் கே. மகாதேவன்—பாட்டு.

மாலை 5-15 பாலக்காடு டி. வி. கிருஷ்ணமூர்த்தி—பாட்டு, 5-45 இசைப் பயிற்சி.

இரவு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 முன்னேற்றப் பாதை—சித்திரம், 7-45 மீனம்பாள் ராமஸ்வாமி—வீணை, 8-45 வாத்திய இசை, 9-15 தேசபக்திப் பாடல்கள், 9-45 நாடகவிழா—"குற்றம் குற்றமே"—டி. என். விசுவநாதன் எழுதிய நாடகம்.

யு. எஸ். அணு சோதனை

கேப்கென்னடி, பெப். 21

அமெரிக்கா நேற்று நிலத்துக்குக்கீழ் அணுகுண்டு சோதனை ஒன்றை நடத்தியது.



உங்கள் அவசர தேவைக்கு வேண்டிய பணம்...

தங்க ஆபரணங்கள் மீது பெற்றுக்கொள்ளலாம்

அவசரமாகப் பணம் சேர்க்கும் உங்களது முயற்சி எல்லா வகையிலுமே தோல்வியடையலாம், என்றுலும் சட்ட விரோதமாக வட்டி பெறுபவர்களிடமிருந்து நீங்கள் சுரண்டப்பட வேண்டிய அவசியமில்லை

தங்க நகைகளை ஈடுவைத்து பணம் பெற நீங்கள் தயாரா்க இருந்தால் மக்கள் வங்கியை ஆலோசனை கேளுங்கள்.

மக்கள் வங்கி

221, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

தீவெங்கிலும் 35 கிளைக் காரியாலயங்கள் உள்ளன.

யாழ்ப்பாணக் கல்லூரிகளின் கிரிக்கெட் போட்டிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்ற சனிக்கிழமை முடிவடைந்த வடபகுதிப் பாடசாலைகளின் இரண்டு வார கிரிக்கெட் போட்டிகளில் 8 போட்டிகள் இடம்பெற்றன.

இந்த விளையாட்டுகளை நோக்குமிடத்து ஃபீல்டிங் கிரிக்கெட் விளையாட்டில் மிக முக்கியமானது என்பதை மாணவர்கள் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும் எனக் குறிப்பிடவேண்டியது அவசியமாக இருக்கிறது.

எமது கிரிக்கெட் விளையாட்டின் தரம் உயரவேண்டுமானல் எங்கள் பாடசாலை மாணவர்கள் துடுப்பெடுத்து ஆடுதலும், பந்தெறிதலும் கிரிக்கெட் விளையாட்டுக்கு எவ்வளவு அவசியமோ, ஃபீல்டிங்கும் அவ்வளவு அவசியமென்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

இரு வாரங்களிலும் இடம்பெற்ற கிரிக்கெட் விளையாட்டுப்போட்டி முடிவுகள் வருமாறு:

1. சென் ஜோன்ஸ் கல்லூரி பட்றிக்ஸ் கல்லூரியை இன்னிங்ஸால் தோற்கடித்தது. 2. மகாஜனக் கல்லூரி சென் பட்றிக்ஸ் கல்லூரியை 3 விக்கெட்டுகளால் தோற்கடித்தது. 3. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் மகாஜனக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் வெற்றி தோல்வியின்றி ஆட்டம் முடிவடைந்தது. 4. கொக்குவில் இந்துக் கல்லூரி யூனியன் கல்லூரியை 34 ரன்களால் தோற்கடித்தது. 5. ஹாட்லிக் கல்லூரி யூனியன் கல்லூரியை இன்னிங்ஸால் தோற்கடித்தது. 6. யாழ்ப்பாணக் கல்லூரி மகாஜனக் கல்லூரியை இன்னிங்ஸால் தோற்கடித்தது. 7. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை 10 விக்கெட்டுகளால் தோற்கடித்தது. 8. சென் பட்றிக்ஸ் ஹாட்லிக் கல்லூரியை 10 விக்கெட்டுகளால் தோற்கடித்தது.

திறமையாக விளையாடியவர்கள்

இந்தப் போட்டிகளின்போது திறமையாகத் துடுப்பெடுத்து ஆடியவர்களின் பெயர் விபரம் வருமாறு:

மகாஜனக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் ருத்ரலிங்கம் 114 ரன்கள் எடுத்து ஆட்டம் இழக்காமலிருந்தார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் ஸ்கந்தவரோதயாக்கல்லூரிக்குமிடையிலான போட்டியில் சச்சிதானந்தன்—75. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் ஸ்கந்தவரோதயாககல்லூரிக்குமிடையிலான போட்டியில் சிவபோதநாதன்—69. சென் ஜோன்ஸ் சென் பட்றிக்ஸ் கிடையிலான போட்டியில் தெய்வேந்திரா—64. ஹாட்லி யூனியன் கல்லூரிப் போட்டியில் சதானந்தன்—58. ஸ்கந்தவரோதயாக் கல்லூரி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிப் போட்டியில் ராஜரத்தினம்—55. யாழ்ப்பாணக் கல்லூரி மகாஜனக் கல்லூரிப் போட்டியில் ஹமீட் அலி—53

பந்து வீச்சில் திறமைகாட்டியவர்கள்:

மகாஜன சென் பட்றிக்ஸ் போட்டியில் 27 ரன்கள் கொடுத்து 7 விக்கெட்டுகளை வீழ்த்தினர் விஜயகமூர்த்தி. தெய்வேந்திரன் மேற்படி கல்லூரிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் 52 ரன்கள் கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினர். சென் பட்றிக்ஸ் ஹாட்லிப் போட்டியில் 22 ரன்கள் கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினர். யாழ் இந்துக் கல்லூரிக்கும் மகாஜனவுக்குமிடையிலான போட்டியில் 36 ரன்கள் கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினர் நந்தகுமார். மேற்படி கல்லூரிகளின் போட்டியில் 36 ரன்கள் கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினர் ஜோதிலிங்கம்.

மகாஜன யாழ்ப்பாணக் கல்லூரிப் போட்டியில் விஜயகமூர்த்தி 52 ரன்கள் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர். சென் பட்றிக்ஸ் சென் ஜோன்ஸ் போட்டியில் அன்ரன் 47 ரன்கள் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இந்த இரு கல்லூரிகளுக்குமிடையிலான போட்டியில் 30 ரன்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர் கனகதுரை. மகாஜன யாழ். இந்துக் கல்லூரிப் போட்டியில் 54 ரன்கள் கொடுத்து விக்கெட்டுகளை வீழ்த்தினர் ஞானசெல்வன். யூனியன் கொக்குவில் இந்துக்கல்லூரிப் போட்டியில் 6 ரன்கள் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர் ஆனந்தராஜா,

---

மதுரை, பெப். 20

மதுரையிலிருந்து 8 மைல் தூரத்திலுள்ள உசிலம்பட்டி ரோட்டில் மதுரை சர்வகலாசாலைக்கான கட்டிடங்கள் அமைக்கப்படும். இதற்காக 1115 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. வட பழனி என்ற கிராமப் பகுதியில் சர்வகலாசாலை அமையும்.

கேள்விப்பத்திர அறிவித்தல்

கிராமசபை - புங்குடுதீவு

ஆவரங்கால் சங்குமாலடி ரோட்

புங்குடுதீவுக் கிராமச்சபை அக்கிராசனர் அவர்களால் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 29 ந் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிவரை டி வேலைக்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து 'சீல்'வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். ரூபா 35-00 (முப்பத்தைந்து)கட்டி 27-2-64 வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரத்திற்குக் கட்டிய பணத்தில் ரூபா 5-00 (ஐந்து) திருப்பிக்கொடுக்கப் படமாட்டாது. விபரங்களைப் புங்குடுதீவு கிராமச்சபைக் காரியாலயத்திலும் உள்ளுராட்சி உதவி அதிபர் (வட மேல் பிரதேசம்)யாழ்ப்பாணம் அவர்கள் காரியாலயத்திலும் அறிந்து கொள்ளலாம்

இங்ஙனம்

சி. கு. அம்பிகைபாகன்,

அக்கிராசனர்

கிராமச்சபை அலுவலகம்,

புங்குடுதீவு.14-2-1964. 1794

அறிவித்தல்

தமிழ்பல்கலைக்கழக வீதி

எங்கள் கிராமச்சபை 22-1-64 ல் நடந்த மாதாந்தக் கூட்டத்தில் உப்புவெளியிலிருந்து நிலாவெளிக்குப் போகும் பிரதான வீதியை தமிழ் பல்கலைக்கழக வீதியென்று அழைப்பதென ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

ஆகையால் 4-2-1964 முதல் இத் தீர்மானத்தை நடைமுறைக்கு எடுத்துள்ளோம்.

நா. கைலாயநாதன்,

அக்கிராசனர்

கிராமசபை,

உப்புவெளி. 13-2-64 1797

அறிவித்தல்

1964-ம் ஆண்டு மாசி மாதம் 27-ந் திகதி காலை 10-00 மணி வரை உப்புவெளி கிராமச் சபைத்தலைவரால் துவரங்காடு ரோட்டுத் திருத்த வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புவோர் மேற்படி காரியாலயத்தில் பிணைப்பணம் ரூபா 70/-ம் பாரப்பத்திரப் பணம் ரூபா 10/-ம் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். பூர்வாங்க விபரங்களை காரியாலயத்தில் அறிந்து கொள்ளவும்.

நா கைலாயநாதன்,

அக்கிராசனர்.

கிராமசபை,

உப்புவெளி.13-2-1964. 1796

வேத சிவாகம விஸ்வ வித்யாபீடம் பிரவேச பரீட்சை

வித்யாபீட பிரவேசபரீட்சை வருகிற ஏப்ரல் மாதம் 4-ம் திகதியன்று ஆரம்பமாகும். இப்பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் அர்ச்சகர் பரம்பரையினராகவும், 12 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரங்கள் வேண்டுவோர் தம் விலாசமிடப்பட்டுப் பத்துச்சத முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட கவரை, தனதிகாரி, விஸ்வ வித்யாபீடம் முன்னேஸ்வரம் தேவஸ்தானம், சிலாபம் என்ற விலாசத்துக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். வேண்டிய விவரங்களை எழுதி அறிந்து கொள்ளலாம். 14-3-64 க்குப் பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

கா. கைலாசநாதக் குருக்கள்,

1795 காரியதரிசி.

வரி விளம்பரம்

விற்பனைக்கு

சோமசெற் EY 4000 சீறிஸ் கேம்பிறிஜ் EN 8000 சீறிஸ் விற்பனைக்கு உண்டு. பிறிமியர் கபே மெயின் வீதி, யாழ்ப்பாணம். 1982

வீடு வாடகைக்கு

வண்ணர்பண்ணையில் நாலு அறை வீடும். 6 பரப்பு நிலமும் வாடகைக்குண்டு. மின்சாரம் உண்டு. பள்ளிக்கூட வசதியும்உண்டு. ம. சிவக்கொழுந்து, 19, பெரியவாசா, பி. ஏ. தம்பி வீதி, வண்ணர்பண்ணை என்ற விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும். 1976

தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்,

---

பிரபல நூலகர் மறைவு

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த ஒருவார காலமாக மூளாய் ஆஸ்பத்திரியில் இருதய நோய் காரணமாகச் சிகிச்சைபெற்று வந்த பிரபல நூலகரும், யாழ். நூலகர் சங்கஸ்தாபகத் தலைவருமான திரு. கே. செல்லையா நேற்று மரணமானர். அவரது மரணம் குறித்து யாழ்ப்பாண நூலகர் சங்கச் செயலாளர் திரு கே. மாணிக்கவாசகர் எழுதுவதாவது:

இலங்கையின் பிரபல நூலகர்களில் ஒருவரான இவர் 40 ஆண்டுகளாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நூலகராகவும், பழைய மாணவர் தொடர்பு அதிகாரியாகவும் கடமையாற்றிச் சென்ற வருடம் இளைப்பாறினர்.

இலங்கை நூலகர் சங்கத்தின் உப தலைவராகப் பதவி வகித்துவந்த இவர் எட்டு வருடங்களுக்கு முன் யாழ். நூலகர் சங்கத்தை ஆரம்பித்து இறுதிவரை அதன் தலைவராகக் கடமையாற்றினர்.

நூலகப் பேராசிரியர் திரு. எஸ். ஆர். ரங்கநாதனின் மாணவராகவும், அவரது நெருங்கிய நண்பராகவும் இவர் இருந்தார். பிரிட்டிஷ் நூலகச் சங்கத்தின் வெள்ளிவிழாவுக்கு இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்.

இந்தியாவிலும், ஐரோப்பாவிலும் சுற்றுப்பிரயாணம் செய்த இவர் பல மகாநாடுகளிலும் கலந்துகொண்டார். பழகுவதற்கு இனிமையான, உத்தமமான இவரின் இழப்பு நூலகர்களுக்குப் பெரும் கவலையைக் கொடுத்துள்ளது.

ஆஸ்பத்திரி ஊழியர் சாப்பிட மறுத்தனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியின் சிறு சேவையாளருக்கு நேற்று அளித்த மதிய போசனம் மிகத்திருப்திகரமற்றதாக விருந்ததென்று காணப்பட்டு அவர்களுக்கு சோறுகறிக்குப் பதிலாகப் பாணும் பழச்சாறும் வருவித்துக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் பதில் அதிபருக்கு ஏற்பட்டது.

மதிய போசனத்திற்குக் கொடுத்த கறி, நீர் கலந்து பெருக்கப் பட்டதாக விருந்ததால் ஆஸ்பத்திரிச் சிறு சேவையாளர்கள் சாப்பிட மறுத்துவிட்டதுடன் பதில் அதிபருக்கும் முறையிட்டனர். நேரில் கறியைப் பார்வையிட்ட பதில் அதிபர் டாக்டர் பாலசுப்பிரமணியம் சமையல் பகுதியினரை எச்சரித்ததுடன் சிறு சேவையாளருக்கு நேற்றைய மதிய போசனத்திற்கு பாணும் பழச்சாறும் வாங்கிக் கொடுக்குமாறும் கட்டளையிட்டார்.

இதுபற்றி ஓர் பூரண விசாரணை நடத்த வேண்டுமென்று அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்க யாழ்ப்பாணக் கிளை யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி பதில் அதிபரை கேட்டுள்ளது.

கொழும்பில்

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் வேலை செய்யும் கங்காணிகளும், தொழிலாளர்களும் தங்களுக்குக்கொடுத்த சாப்பாட்டை உண்ண மறுத்துள்ளார்கள். தங்களுக்குக் கொடுக்கப்படும் உணவு தரத்தில் குறைவாக இருப்பதாலேயே இந்த 1200 பேரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட சாப்பாட்டை உண்ணமறுத்தார்கள். சாப்பிடாமல் மறுத்துள்ள தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள் இதுபற்றி சுகாதார இலாகா அதிகாரிகளுக்கு புகார் செய்துள்ளன

ஆசிரிய பயிற்சியும் ஆசிரியரல்லாதவரும்

கொழும்பு, வியாழன்

இனிமேல் ஆசிரியர்களாக இருப்பவர்களே சாதாரண ஆசிரிய பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுவார்கள். ஆசிரியர் அல்லாதவர்கள் மாணவ ஆசிரியர்களாக சேர்ந்து ஒரு வருட காலம் பணி புரிந்த பின்னரே அனுமதிப் பரீட்சைக்கு தோற்றமுடியும். இதுவரை காலமும் ஆசிரியர் பயிற்சிக்கான அனுமதிப் பரீட்சைக்கு ஆசிரியர் அல்லதவர்கள் தோற்றுவது சட்டரீதியாக தடைசெய்யப்படாமலிருந்த பொழுதிலும் இப்பொழுது சட்ட ரீதியாகவே கொண்டுவரப்பட்டுள்ளது.

கணித, விஞ்ஞான, வர்த்தக கைப்பணி விசேஷ பயிற்சிகளுக்குஆசிரியர்கள் அல்லாதவர் தோற்றலாம் எனவும், அப்பரீட்சையில் ஆசிரியர்கள் அல்லாதவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடக்கம் அவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் எனவும் 1965-ம் ஆண்டு ஜனவரி தொடக்கம் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் உதவிக் கல்வி டைரக்டர் திரு. டி.எம். ஹெட்டியாராச்சி தெரிவித்தார். சென்ற வருடப் பரீட்சையில் சித்தியெய்திய ஆசிரியரல்லாதவர்கள் இவ்வருடம் அக்டோபர் மாதம் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள். இவ்வருடம் நடைபெறும் பரீட்சையில் சித்தியடையும் ஆசிரியரல்லாதவர்கள் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

4-வது மகத்தான வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜிதா (ஹட்டன்)

நிந்தாவூர் சினிமா (நிந்தாவூர்)

எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி
எம். ஆர். ராதா, மனோகர், வி. கே. ராமசாமி,
புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, ஜி. வரலக்ஷ்மி
சி. எஸ். சரோஜா, சம்பந்தம்
மற்றும் பலர் நடிக்கும்

மொடர்ன் தியேட்டர்ஸ்
காட்டு ரோஜா
இசை: கே. வி. மகாதேவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ஜானகி — பி. எஸ். கோவிந்தன் நடித்த
1000 தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி

தேசிய சுவீப் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 306-20 பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

23 E 0747
18 D 0490
23 Q 0161
22 X 0654
11 R 0664
11 A 0471
17 M 0508
14 H 0612
23 E 0236
10 H 0161
16 A 0437
21 P 0013
16 N 0870
03 T 0486
26 M 0388
04 S 0424
16 N 0679
11 N 0666
05 K 0630
19 L 0487
19 S 0730
27 L 0115
14 E 0396
19 D 0042
06 S 0071
17 V 0632
04 K 0711
18 L 0778
19 T 0579
16 H 0340
07 H 0993
16 D 0122
17 P 0969
19 R 0185
13 V 0555
06 P 0181
08 F 0031
02 P 0028
22 A 0860
18 U 0400
24 P 0266
19 S 0140
11 P 0519
24 B 0188
04 A 0076
05 Z 0305
24 P 0746
18 N 0959
04 N 0368
17 Y 0297
17 P 0428
09 V 0526
11 G 0078
04 X 0950
12 W 0788
01 H 0611
21 J 0253
09 W 0323
06 O 0169
17 C 0926
02 A 0016
04 E 0253
03 C 0929
16 U 0035
23 S 0096
18 H 0305
06 M 0611
25 K 0803
14 R 0641
06 W 0328
01 F 0720
15 W 0975
19 S 0590
16 M 0581
08 A 0919
08 G 0093
09 Z 0120
11 X 0239
17 G 0305
22 C 0850
03 W 0168
10 O 0275
17 W 0168
16 A 0354
06 X 0500
04 K 0942
22 J 0757
23 R 0096
10 V 0649
03 N 0834
14 M 0942
17 K 0675
01 Z 0267
23 D 0241
06 V 0698
25 Y 0414
02 E 0597
22 V 0085
03 G 0345
10 P 0123

ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பள்ளி எழுச்சியிலே மாணிக்கவாசக சுவாமிகள்.

ஆனல் யாழ்ப்பாணத்தில் நம்மில் பலரையும் தட்டி எழுப்பும் ஓர் ஒலி என்ன தெரியுமா? மல வாளியுடன் பல தெருவிலும் செல்லும் கை வண்டிகளின் 'கடபடா,' 'கடபடா' சப்தம்தான்! இது பெரியதோர் கண்ருவி.

இலங்கையிலே இரண்டாவது பெரிய பட்டணமான யாழ்ப்பாணத்துக்கு இது அழகல்ல. ஆனலும் என்ன செய்யலாம்!

இந்தியாவிலும் பல நகரங்களில் இவ்வித கைவண்டிகளுக்கு ரப்பர் டயர் போட்டுள்ளதால், இந்த சப்தமில்லாமல் போவதுடன், தள்ளுபவர்களுக்கும் சுலபமாக இருக்கின்றது. இலங்கையிலோ ஏராளமான ரப்பர் உற்பத்தியாகிறது. ஏற்றுமதி செய்கிறேம். யாழ்ப்பாணத்தில் இவ்வண்டிகளுக்கு ரப்பர் டயர் போட உடன் ஒழுங்கு செய்ய முடியாதா?

* * *

'சுகாதார ஒலி'க்கு இது வரை ஆசிரியராக இருந்த டாக்டர் சிவஞானசுந்தரம் (நந்தி) மாற்றலாகிச் செல்லுகிறார். நல்ல எழுத்தாளரான அவர் இங்கு பலரது அபிமானத்தையும் பெற்றுள்ளார். அவருக்கு நடந்துள்ள பல பிரியாவிடைக் கூட்டங்களே இதற்குச் சான்று. அவர் செல்வது யாழ் நகருக்கு ஒரு நஷ்டமே என்றாலும், மீண்டும் பெரிய பதவியில் அவர் இங்கு திரும்புவாரென்றே பலரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

* * *

ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் (இலங்கைக்கிளை) தலைவர் சுவாமி பிரேமாத்மானந்தஜீ இப்போது கல்கத்தாவில் சிகிச்சை பெற்று வருகிறாராம். அவர் பூரண குணமடையக் கொழும்பு ஜயந்திநகர் (ஜிந்துப்பிட்டி) கோவிலில் இன்று மாலை ஷண்முக அர்ச்சனையும் பிரார்த்தனையும் விசேஷமாக நடத்த பல அன்பர்கள் ஒழுங்கு செய்துள்ளதாக அறிகிறேன்.

* * *

விடுதலை மெய்யடியார்க்கருள் செய்வாரும் வேலைவிட முண்டிருண்ட கண்டத்தாருங்,
கூடவர் தம் மூவெயிலும் எரி செய்தாருங் குரைகழலாற் கூற்றுவனைக் குமை செய்தாரும்,
ஆடுமர வலரக்கசைந்தங் காடுவாருங் ஆலமர நீழலிருந்தறஞ் சொன்னரும், வேடுவனுய்மேல் விஜயற் கருள் செய்தாரும்
வெண்ணியமாந் துறைகின்ற விகிர்தனரே.

—திருநாவுக்கரசர்

கண்டியில்

சென். ஜோன்ஸ் - சில்வேஸ்டர் கிரிக்கெட் போட்டி

வைரவப்பிள்ளை 5 விக்கட் வீழ்த்தினர்

(ஈழநாடு நிருபர்)

கண்டி, வெள்ளி

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் கண்டி சென். சில்வேஸ்டர் கல்லூரிக்குமிடையே இன்று சில்வேஸ்டர் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான கிரிக்கெட் போட்டியில், சென். ஜோன்ஸ் கல்லூரி தனது முதலாவது இன்னிங்ஸில் எல்லாவிக்கட்டுகளையும் இழந்து 213 ஓட்டங்கள் எடுத்தது.

தனது முதலாவது இன்னிங்ஸை விளையாடத் தொடங்கிய சென். ஜோன்ஸ் இன்று எல்லா விக்கட்டுகளையும் இழந்து 213 ஓட்டங்கள் எடுத்தது. இதன் பின்னர் விளையாட ஆரம்பித்த சென். சில்வேஸ்டர் கல்லூரி தனது முதலாவது இன்னிங்ஸில் ஆட்ட நேர இறுதிவரை 6 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 186 ஓட்டங்கள் எடுத்தது.

சில்வேஸ்டர் கல்லூரி சார்பில் விளையாடிய வீரர்களில் ஐவரை அவுட்டாக்கிய பெருமை சென். ஜோன்ஸைச் சேர்ந்த செல்வன் வி. வைரவப்பிள்ளையையே சாரும். துரிதமாக பந்தை வீசி குறுகிய ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கட்டுகளை வீழ்த்திய அவரது செயல் பாராட்டக் கூடியது.

ஆட்டம் சனிக்கிழமை தொடர்ந்து நடைபெறும்.

சங்கக் கூட்டம் குழப்பத்தில்முடிந்தது

யாழ்ப்பாணம், சனி

அளவெட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் குழப்பம் காரணமாக ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

இச் சங்கத் தலைவர் திரு. அ. விசுவநாதனின் தலைமையில் கூடிய இக்கூட்ட நிகழ்ச்சி நிரலில், ஒரு அங்கத்தவரால் அனுப்பிவைக்கப்பட்ட பிரேரணை சேர்க்கப்படவில்லையென்ற பிரச்னை கிளப்பப் பட்டதைத் தொடர்ந்தே இக்கூட்டம் குழப்பத்தால் இறுதியில் ஒத்திவைக்கப்பட்டது. அப்பிரேரணை அடுத்த கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படுமென அங்கு பிரசன்னமாயிருந்த கூட்டுறவுப் பகுதி அதிகாரி அங்கத்தவர்களுக்கு உத்தரவாதமளித்து அமைதியை நிலை நாட்டினர்.

இன்று தலைவர் தெரிவு

உடுப்பிட்டி, சனி

புதிதாக உருவாக்கப்பட்ட நெல்லியடி பட்டினசபையின் தலைவர் தெரிவு இன்று காலை 10 மணிக்கு உள்ளூராட்சி மன்றத்தின் யாழ்ப்பாணப்பகுதி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சாக்கோ ராஜினமா ஏற்கப்பட்டது

திருவனந்தபுரம், பிப். 21

கேரள மந்திரிசபையிலிருந்து திரு. சாக்கோ. ராஜினமாச் செய்துவிட்டார் என்றும் இந்த ராஜினமாவைத் தாம் ஏற்றுக்கொண்டதாயும் முதன்மந்திரி திரு. சங்கர் அறிவித்தார்.

சபாநாயகர் திடீர் விஜயம்

கொழும்பு, வெள்ளி

சபாநயகர் திரு. ஹியூ பெர்னண்டோ நேற்று பாராளுமன்ற அங்கத்தவர்கள் தங்குமிடமான சிராவஸ்திக்கு திடீர் விஜயம் செய்தார்.

யாழ். பாடசாலைகள் கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குமிடையே நேற்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட்போட்டியில் யாழ்ப்பாணக்கல்லூரி முதலாவது இன்னிங்ஸில் 112 ரன்களை எடுத்ததுயாழ். இந்துக்கல்லூரி முதல் இன்னிங்சில் 209 ரன்களை எடுத்திருந்தது.

இரண்டாவது இன்னிங்சில் யாழ்ப்பாணக்கல்லூரி 2 விக்கட்டுகளை இழந்து 3 ரன்களை எடுத்தது. இன்று போட்டி தொடர்ந்து நடைபெறும்.

நேற்று நடைபெற்ற இப்போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஜோதிலிங்கம் 23 ரன்களைக் கொடுத்து 7 விக்கெட்டுகள் வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

மத்தியகல்லூரி - யூனியன்

யாழ். மத்தியகல்லூரிக்கும் யூனியன் கல்லூரிக்குமிடையில் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் மத்தியகல்லூரி முதல் இன்னிங்சில் 138 ரன்களை எடுத்தது. யூனியன்கல்லூரி ஒரு விக்கெட்டையும் இழக்காமல் 10 ரன்களை எடுத்தது. போட்டி இன்று தொடர்ந்து நடைபெறும்.

ஹாட்லி—மஹாஜன

ஹாட்லிக் கல்லூரிக்கும் மஹாஜன கல்லூரிக்குமிடையே ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ஹாட்லிக்கல்லூரி 223 ரன்களை முதலாவது இன்னிங்சில் எடுத்தது. மஹாஜனக் கல்லூரி 4 விக்கெட்டுகளை இழந்து 67 ரன்களை எடுத்தது. இன்று போட்டி தொடர்ந்து நடைபெறும்.

தென்னுபிரிக்கா 233 — 7

வெலிங்டன், பெப். 21

தென்னுபிரிக்காவுக்கும் நியுஸிலாந்துக்குமடையே இன்று வெலிங்டனில் ஆரம்பமான கிரிக்கெட் டெஸ்டில், தென்னுபிரிக்கா தனது முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 233 ஓட்டங்கள் எடுத்தது.

போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தினல் ஆட்ட நேரத்துக்கு முன்பாக போட்டி நிறுத்தப்பட்டது. ஆட்டத்தைத் தொடர்ந்து நாளை விளையாடுவார்கள்.

ராவல்பிண்டி, பெப். 21

சீனப் பிரதம மந்திரி திரு. சூ-என்-லாய் நேற்று ராவல்பிண்டியில் பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கானைச் சந்தித்துப் பேசினர். சீன வெளிநாட்டு மந்திரி மார்ஷல் சென்யீ, பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. புட்டோ ஆகியோர் அப்போது உடனிருந்தனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.